



# ஹதீஸின் வகைகள்
## (குத்ஸீ, நபவி)

வஹீ என்ற பதத்தின் மூலம் இரு முக்கிய விடயங்கள் நாடப்படுகின்றன. ஒன்று அல்லாஹ்வின் கலாமாகிய அல் குர்ஆன். இது **வஹீ மத்லுவ்வு** (ஓதிக் காண்பிக்கப்பட்ட வஹி) என அழைக்கப்படும். மற்றையது நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களது ஹதீஸ்களாகும். இது **வஹீ கைறு மத்லுவ்வு** (ஓதிக் காண்பிக்கப்படாத வஹி) என அழைக்கப்படும்.

நாம் இப்பாடத்தில் வஹீயின் இரண்டாம் பிரிவாகிய ஹதீஸ்கள் பற்றி அறிந்து கொள்வோம்.

நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களது வார்த்தைகளும் வஹீயாக அருளப்பட்டவையே என்பதைப் பின்வரும் அல் குர்ஆன் வசனம் உறுதிசெய்கின்றது:

அதாவது:

وَمَا يَنْطِقُ عَنِ الْهَوٰى اِنْ هُوَ اِلَّا وَحْيٌ يُّوْحٰى

***''அவரது விருப்பப்படி எதனையும் அவர் கூறுவதில்லை. அவர் கூறுவதெல்லாம் வஹீ தவிர வேறில்லை.'' (53: 3-4)***

அவ்வாறே நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களும் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்கள்:

" أَلاَ وَإِنِّي أُوتِيْتُ الْقُرْآنَ وَمِثْلَهُ مَعَهُ "

*''அறிந்து கொள்ளுங்கள் எனக்கு அல் குர்ஆனும் அதனுடன் அது போன்று இன்னுமொன்றும் கொடுக்கப்பட்டுள்ளன.'' (அபூதாவூத், அஹ்மத்)*

மேற்குறிப்பிட்டவாறு ஹதீஸ்கள் வஹீ என்ற தலைப்பினுள் அடங்கியுள்ள போதிலும் அடிப்படையில் அல் குர்ஆனுக்கும் ஹதீஸ்களுக்குமிடையில் பல வேறுபாடுகள் உள்ளன. அல் குர்ஆனின் வார்த்தைகள், அதன் உள்ளடக்கம் அனைத்தும் அல்லாஹ்விடமிருந்து அருளப்பட்டவையாக இருக்கும். ஹதீஸ்களின் உள்ளடக்கம் அல்லாஹ்விடமிருந்து அறிவிக்கப்பட்டவையாகவும் அவற்றின் வார்த்தைப் பிரயோகங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடையதாகவும் அமைந்திருக்கின்றன. இதுவே அல் குர்ஆனுக்கும் ஹதீஸுக்குமிடையிலான அடிப்படை வேறுபாடாகும்.

இனி ஹதீஸ்களின் முக்கிய இரு பிரிவுகளைான ஹதீஸ் குத்ஸீ, ஹதீஸ் நபவீ பற்றிச் சுருக்கமாக நோக்குவோம்.

## ஹதீஸ் குத்ஸீ

அல்லாஹ் கூறுகிறான் என்ற வார்த்தையுடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் கூறப்பட்ட ஹதீஸ்கள் **ஹதீஸ் குத்ஸீ** என அழைக்கப்படுகின்றன. உதாரணமாக:

يَقُولُ رَسُولُ اللهِ صَلّى اللّهُ عَليهِ وَسَلَّمَ عَنِ اللهِ سبُحَانَهُ وَتَعَالَى: "قال اللّهُ أعْدَدْتُ لِعِبَادِيَ الصَّالِحِينَ مَا لاَ عَيْنٌ رَأتْ وَلاَ أُذُنٌ سَمِعَتْ وَلاَ خَطَرَ عَلَى قَلْبِ بَشَرٍ" (رواه البخاري)

அல்லாஹ் கூறுவதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: ''எனது ஸாலிஹான அடியார்களுக்கு எந்தக் கண்ணும் கண்டிராத எந்தக் காதும் கேட்டிராத மனித கற்பனைக்கு எட்டாதவற்றை நான் தயார்செய்து வைத்துள்ளேன்'' என அல்லாஹ் கூறுகின்றான். (புகாரி)

### அல் குர்ஆனுக்கும் ஹதீஸ் குத்ஸீக்கும் இடையிலான வேறுபாடு

1. அல் குர்ஆன் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஊடாக அருளப்பட்டதாகும். ஹதீஸ் குத்ஸீ சில சமயங்களில் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஊடாகவும் மற்றும் சில சமயங்களில் வேறு வடிவங்களிலும் அருளப்பட்டுள்ளன.
2. அல் குர்ஆன் அனைத்தும் முதவாதிர் எனும் முழுமையான நம்பகத் தரம் வாய்ந்ததாகும். ஹதீஸ் குத்ஸீ அவ்வாறானதல்ல. அதில் பல வகை உண்டு.
3. அல் குர்ஆன் தொழுகையில் ஓதப்படக்கூடிய ஒன்றாகும். அத்துடன் அதனை ஓதுவது ஒரு வணக்கமுமாகும். ஆனால், ஹதீஸ் குத்ஸீ அவ்வாறானதல்ல.

4. அல் குர்ஆன் முஃஜிஸாக்களுள் ஒன்றாகும். ஹதீஸ் குத்ஸீ முஃஜிஸாக்களுள் அடங்குவதில்லை.

5. அல் குர்ஆன் வரையருக்கப்பட்ட 6666 வசனங்களைக் கொண்டது. ஹதீஸ் குத்ஸி எண்ணிக்கை சரியாகக் குறிப்பிடப்படவில்லை.

6. அல் குர்ஆன் முழுவதும் மனித உள்ளங்களில் பரவலாக மனனமிடப் பட்டுள்ளது. ஹதீஸ் குத்ஸி முழுவதும் அவ்வாறு மனனமிடப்படவில்லை.

7. ஹதீஸ் குத்ஸீ ஆர்வமூட்டல், அச்சமூட்டி எச்சரிக்கை செய்தல், எதிர்பார்ப்புடன் கூடிய நம்பிக்கை போன்ற கருப்பொருளையே அதிகம் சார்ந்திருக்கும்.

## ஹதீஸ் நபவீ

இவ்வகை ஹதீஸ்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சொல், செயல், அங்கீகாரம், அவர்களது சரீரம் மற்றும் பண்புகள் தொடர்பான விவரணங்களை உள்ளடக்கியதாகும். இவற்றுள் **சொல் சார்ந்தவை - கவ்லி** எனவும் **செயல் சார்ந்தவை - பிஅலி** எனவும் **அங்கீகாரம் பெற்றவை - தக்ரீரி** எனவும் அழைக்கப்படுகின்றன. பின்வருவன ஹதீஸ் நபவிக்கான சில உதாரணங்களாகும்:

قَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيهِ وَسَلَّمَ :"كَلِمَتَانِ خَفِيْفَتَانِ عَلَى اللِّسَانِ، ثَقِيْلَتَانِ فِيْ الْمِيْزَانِ، حَبِيْبَتَانِ إِلَى الرَّحْمَنِ سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ: سُبْحَانَ اللهِ الْعَظِيْمِ، ".

''நாவுக்கு (மொழிவதற்கு) இலகுவானதும், தராசுக்குப் பாரமானதும், அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானதுமான இரு சொற்றொடர்கள் உள்ளன. அவை: ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி, ஸுப்ஹானல்லாஹில் அழீம் என்பனவாகும்'' (புஹாரி முஸ்லிம்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள்.

قَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيهِ وَسَلَّمَ : "إِذَا كُنْتُمْ ثَلَاثَةً، فَلَا يَتَنَاجَ رَجُلَانِ دُوْنَ الْآخَرِ حَتَّى تَخْتَلِطُوا بِالنَّاسِ أَجَلَ أَنْ يُحْزِنَه".

''நீங்கள் மூவர் இருக்கும்வேளை, மக்களோடு கலக்காதவரை மூன்றாம் நபரை விட்டு விட்டு இருவர் இரகசியம் பேச வேண்டாம். அது அவருக்குக் கவலையை ஏற்படுத்தும்.'' (புஹாரி)

**இவ்வாறாக இலட்சக் கணக்கில் நபி மொழிகள் உள்ளன. எனவே ஹதீஸ்களுக்கு முக்கியத்துவம் வழங்கி அதனை நமது வாழ்வில் நடைமுறைப்படுத்த முயற்சிப்போமாக.**

**பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்**

الْحَدِيْثُ   الْقُدْسِيْ   النَّبَوِيْ   الْوَحْيُ   مُعْجِزَاتٌ   مُتَوَاتِرٌ   وَحْيٌ مَتْلُوْ

وَحْيٌ غَيْرَ مَتْلُوْ   تَقْرِيْرِي   فِعَلِي   قَوْلِي

## பயிற்சி

**(அ) சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

*1. ஹதீஸ் குத்ஸீ இஸ்லாத்தின் மூன்றாவது மூலாதாரமாகும். ( )*

*2. அல் குர்ஆன் முழுவதும் முழுமையாக ஏற்றுக் கொள்ளத் தக்கதாகும். ( )*

*3. சொல், செயல், அங்கீகாரம் போன்ற வகைகள் ஹதீஸ் நபவியில் உள்ளன. ( )*

*4. வஹீ கைறு மத்லுவ்வு என்பது அல் குர்ஆனைக் குறிக்கும். ( )*

**(ஆ) பின்வருவனவற்றுக்கு உதாரணமாக ஒவ்வொரு ஹதீஸ் தெரிந்து எழுதுக.**

- ★ *ஹதீஸ் குத்ஸீ*
- ★ *ஹதீஸ் நபவி*